# கிறித்தவக் காப்பியங்களில் பாயிரம்

***முனைவர் செ. மார்கண்டன்***
இணைப் பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6394

***முன்னுரை***

*“ஆயிரம் முகத்தான்*
*அகன்றதாயினும்*
*பாயிரம் இல்லது பனுவல் அன்றே”*

*என்று தமிழ் இலக்கண நன்னூல் பாயிரத்தின் அவசியத்தை புலப்படுத்துகிறது. பாயிரம் (வாழ்த்து) இல்லாத நூல் சிறந்த நூலாக முடியாது. இக்கருத்தை தமிழ் காப்பியங்கள் போன்றே இவ்விலக்கணக் கோட்பாட்டை கிறித்தவக் காப்பியங்களும் ஏற்றுக் கொண்டுள்ளதை நாம் அறிவோம். அதன் அடிப்படையில் கிறித்தவக் காப்பியத்தில் படைக்கப்பட்டுள்ள பாயிரத்தை (வாழ்த்து) ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**பாயிரம் (வாழ்த்து)**

வாழ்த்து என்பது கவி,

**“தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட**
**பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல்”**

என்று பரிமேலழகர் திருக்குறள் உரையில் கடவுள் வாழ்த்துப் பற்றிக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரத்திற்கு முன் நிகண்டுகளிலும் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து இடம் பெறவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களிலும் பாயிரப்பகுதியில் கடவுள் வாழ்த்து இடம்பெறவில்லை.

சீவகசிந்தாமணியில் பதிகத்திற்கு முன்பு முதலில் கடவுள் வாழ்த்து இடம்பெற்றுள்ளது. கம்பராமாயணத்தில் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் காண்ட வாழ்த்து பாடப்பட்டுள்ளது. கிறித்தவக் காப்பியங்களான தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், திருத்தொண்டர் காப்பியம், ஆதியாகம் காவியம் ஆகிய நான்கு காப்பியங்களில் பாயிரத்திலேயே கடவுள் வாழ்த்து இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. திருத்தொண்டர் காப்பியத்தில் காண்ட வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இதில் இயற்கை வாழ்த்து இடம்பெறவில்லை. தந்தை, மகன், தூய ஆவி என பிதாவானவர் ஒன்றில் மூன்றாய், மூன்றில் ஒன்றாய் கலந்துள்ளனர் என்பதன் அடிப்படையில் மூவொரு இறைவாழ்த்து பாடப்பட்டுள்ளமை கிறித்தவக் காப்பியக் கொள்கையாக அமைகிறது.

சீவக சிந்தாமணியில் மூன்று பாடல்களில் கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. முதலில் தேவாதி தேவனுக்கு வணக்கம் பாயுள்ளார்.

**"மூவா முதலா உலகம்ஒரு மூன்றும் ஏத்தத்"**

**சீவக சிந், கடவுள் வாழ்த்து - 1**

என்று முடிவும் தோற்றமும் அற்றவன், மூவுலகும் போற்றக் கூடியவன் ஒப்புயவர்வற்று விளங்குகின்ற தேவாதி தேவனுடைய திருவடிகளை வணங்குவோம் என்று பாடியுள்ளார். அருகப் பெருமானின் திருவடித் தாமரை மலர்களை நம் தலைமேல் வைத்துப் போற்றுவோம் என்று அருகப் பெருமானுக்கு வணக்கமும் அறவழியில் செல்கின்ற சாதுக்களைச் சரண் அடைந்ததனால் பெற்ற பேற்றினால் இந்நூல் எழுதும் வாய்ப்பினைப் பெற்றேன் என்று சாதுக்களுக்கு வணக்கமும் பாடியுள்ளார். காப்பியத்தின் தொடக்கத்தில் பதிகத்திற்கு முன்பு முதலில் கடவுளை வாழ்த்துவதும் நூல் எழுதக் காரணமான சாதுக்களை வணங்குவதும் திருத்தக்கத் தேவரின் காப்பியக் கொள்கையாகக் கொண்டுள்ளார்.

கம்பராமாயணத்தில் பாயிரத்தில் மூன்று பாடல்களில் கடவுள் வணக்கம் இடம்பெற்றுள்ளது. கம்பராமாயணத்தின் உரையாசிரியரான அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள்

கடவுள் வாழ்த்து இரு வகைப்படும் எவ்கிறார்.

**"தாம் மேற்கொண்ட முயற்சி இனிது நிறைவேற வேண்டும் என்று கருதுகின்ற கவிஞர் கடவுள் வாழ்த்துடன்**
**தொடங்குதல் மரபு. வாழ்த்தும் வணக்கமும் என கடவுள்**
**வாழ்த்து இரு வகைப்படும் என்று குறிப்பிடுகிறார்."**

படைத்தல், காத்தல், அழித்தல் என முத்தொழில் புரிபவனாகிய பரமனுக்கு நாங்கள் சரண் என்று இறைவனை சரண் அடைகிறார். சரண் புகுவதை முடியாகக் கூறுவதால் இது வணக்கத்தின் பாற்படுவதாகிறது என்கிறார் உரையாசிரியர்.

## கிறித்தவக் காப்பியத்தில் வாழ்த்து

கிறித்தவ காப்பியங்களில் பாயிரத்தில் பிதா வாழ்த்து, மூவொரு இறைவாழ்த்து என இரண்டு வகையான வாழ்த்துகள் இடம்பெற்றுள்ளன.

## தந்தை வாழ்த்து

தேம்பாவணியில் தந்தை வாழ்த்து இடம்பெற்றுள்ளது. விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு ஆகிய மூன்று உலகங்களையும் படைத்து, காத்து, அழிக்க வல்லவன் பிதாவாகிய கடவுள். எனவே, பிதாவை முன்னிலைப்படுத்தி பிதா வாழ்த்து பாடியுள்ளார் வீரமாமுனிவர்.

## மூவோர் இறைவாழ்த்து

இரட்சணிய யாத்திரிகத்தில் பிதா, மகன், தூய ஆவி ஆகிய மூவருக்கும் தனித்தனியாகவும் அடுத்து "மூவோர் இறை வாழ்த்து" என மூலரையும் சேர்த்து ஒரு வாழ்த்தும் பாடப்பட்டுள்ளது.

## தேம்பாவணியில் வாழ்த்து

கி.பி.1710-இல் இந்தியாவிற்கு வந்த வீரமாமுனிவர் பதினொரு ஆண்டுகள் கழித்து, கி.பி.1720-இல் தமிழ் மீதுள்ள பற்றின் காரணமாக தமிழைக் கற்றுத் தேம்பாவணி எனும் பெருங்காப்பியத்தை இயற்றினார். தமிழில் வழங்கப்படும் கடவுளின் முத்தொழிலை ஏற்று முதல் கடவுள் வாழ்த்தை அமைத்துள்ளார். அதாவது, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை செய்பவர் இறைவன் ஒருவரே என்று குறிப்பிட்டு பொதுவான கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ளார்.

வணக்கமும் வாழ்த்தும்

**“சீரிய உலக மூன்றும் செய்து அளித்து அழிப்ப வல்லாய்”**

**(தேம். பாயி 1)**

என்னும்பாடலில்விண்ணுலகு,மண்ணுலகு, கீழுலகு என்ற மூன்று உலகங்களையும் படைத்து, காத்து அழிக்க வல்லவன் இறைவன். அவனுக்கு ஒப்பானவரும் உயர்வானவரும் இல்லை அனைத்தையும் வென்றவன் இறைவன். அத்தகைய இறைவனின் தாமரை போன்ற பாதத்தினைப் பாவச் செயல்கள் அற்றுப்போகும் வண்ணம் பணிந்து வணங்குவோம். நாவால் உயர்த்தி வாழ்த்துவோம் என வீரமாமுனிவர் பெதுவாக இறைவனை வாழ்த்திப் பாடியுள்ளார்.

## முத்தொழில்

தேம்பாவணியில் வீரமாமுனிவர் விவிலிய ஆதி யாகமத்தில் கூறப்படும் மூவுலகைப் படைத்தவன் இறைவன் என்பதை முதலில் கூறி, பின்னர் படைத்தல், காத்தல், அழித்தல் என முத்தொழில் புரியும் கடவுளைப் போற்றுவது தமிழகத்தில் வழங்கிய சமய மரபு. தமிழ் மரபைப் போற்றும் கத்தோலிக்க கிறித்தவரான வீரமாமுனிவர் படைத்தல்,

காத்தல், அழித்தல் என முத்தொழிலையும் செய்பவர் இறைவன் ஒருவரே என்ற அடிப்படையில் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

ஆதியாகம காவியத்தில் ச. சாமிமுத்து அவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலை உடையவன் இறைவன் ஒருவனே என்றும் கூறுகிறார். இதனை,

**“முத்தொழில் தத்துவ மூர்த்தியுன் மாண்பினை”**

**(ஆதி.கா.பாயி. 7:1)**

என்னும் பாடல்வழி அறியமுடிகிறது,

## முடிவுரை

வாழ்த்து என்பது தான் வழிபடும் கடவுளையோ அல்லது காப்பியப் பொருண்மைக்கு ஏற்புடைய கடவுளையோ வாழ்த்திப் பாடுவதாக சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய உள்ளது. இரண்டு காப்பியங்களில் பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்து இடம்பெறவில்லை. சீவகசிந்தாமணியில் பதிகத்திற்கு முன்பு முதலில் கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து இடம்பெற்றுள்ளது. கிறித்தவக் காப்பியங்களில் தான் எடுத்துக் கொண்ட காப்பியப் பொருண்மைக்கு ஏற்ப கடவுள் வாழ்த்து பாடப்பட்டுள்ளது.

தேம்பாவணியில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் படைத்தவன் இறைவன் என கடவுன் வாழ்த்துப் பாடியிருப்பது தமிழ்ச் சமய மரபை போற்ற வேண்டும் என்பதை தனது காப்பியக் கொள்கையாகக் கொண்டுள்ளார் என்பதை உணர்த்துவதாக உள்ளது. இரட்சணிய யாத்திரிகத்தில் இறைத்தந்தை வாழ்த்தானது ஐம்பூதத் தத்துவமாய் ஆனவர், ஒன்றில் மூன்றாய் மூன்றில் ஒன்றாய் -ஆனவர், நினைத்திடும் மாத்திரத்தில் அருள்பவர், மெய்ஞ்ஞான குன்று. தன் மைந்தனை உலகிற்குத் தந்தவர் என்று வாழ்த்துப் பாடப்பட்டுள்ளது. இறைமகன் வாழ்த்தானது, இறைமகன் மண்ணில் பிறந்து மக்களின் பாவங்களையும் துன்பங்களையும் போக்கியவர். அவரை வாழ்த்தும் வகையில் மூன்று காப்பியங்களிலும் இறைமகன் வாழ்த்து பாடப்பட்டுள்ளது.

## துணை நின்ற நூல்கள்

1. இரா. ஆரோக்கியசாமி, கிறித்தவ இலக்கிய வரலாறு, ப. 352.
2. பா. வளன் அரசு, தேம்பாவணித் திறன், ப.31.
3. சூ.இன்னாசி, தேம்பாவணித் திறன், ப.45.
4. பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.7.
5. அ.சா.ஞானசம்பந்தன், (உரை), கம்பராமாயணம், ப. 3.